# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

MSSRF
Science for Sustainable Development

| மாவட்டம் : | தேனி | காலம் : | 17/08/2022 | முதல் | 21/08/2022 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 065/ 2022 | வெளியீட்டு நாள் : | | 16/08/2022 | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (11.08.2022 முதல் 15.08.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-08-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/08 | 12/8 | 13/08 | 14/08 | 15/08 | தேதி | நாள்-1 17/08 | நாள்-2 18/08 | நாள்-3 19/08 | நாள்-4 20/08 | நாள்-5 21/08 |
| 0.9 | 0.7 | 0.1 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 4 | 12 | 10 | 4 |
| 36 | 37 | 38 | 36 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 32 | 31 | 32 |
| 23 | 24 | 25 | 23 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 21 | 21 | 22 |
| 4 | 5 | 4 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 6 | 7 | 7 | 5 |
| 59 | 58 | 56 | 58 | 61 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 75 | 75 | 80 | 70 |
| 44 | 43 | 46 | 49 | 44 | | 60 | 65 | 65 | 65 | 60 |
| 19 | 8 | 4 | 2 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| மேற்கு | மேற்கு | தென்மேமேற்கு | தென்மேமேற்கு | மேற்கு | **காற்றின் திசை** | மேற்கு | மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஆகஸ்ட் 18, 21 தேதி லேசான மழையும், 19, 20 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 31° - 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், மேற்கு மற்றும் வடமேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஆகஸ்ட் 19ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (19-25 ஆகஸ்ட் 2022):**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டிய மழைப் பொழிவு காணப்படும்.

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும்.28°செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும்.20° செல்சியஸ் முதல் 26° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : நிலக்கடலை,** எலுமிச்சை, கால்நடை.

**நிலக்கடலை:**

- **நிலக்கடலை பயிரில் களை கட்டுப்பாடு முறையை மேற்கொள்ளலாம்.**
- **கடலை விதைத்த 3-ம் நாள் எக்டருக்கு 2 லிட்டர் ஃப்ளுகுளோரலின் தட்டை விசிறி நுன்குழாய் மூலம் 500 லிட்டர் தண்ணீர் கலந்து தெளித்து தொடர்ந்து பாசனம் செய்யலாம்.**

எலுமிச்சை:

- நிலவும் பருவநிலையை பயன்படுத்தி எலுமிச்சை பழப்பயிர் சாகுபடி செய்யலாம்.
- 7.5 செ.மீ நீள, அகல, ஆழமுள்ள குழிகளில் 5 லிருந்து 6 மீட்டர் இடைவெளிவிட்டு நல்ல வளர்ச்சியடைந்த நாற்றுகளைக் குழியின் நடுவில் நடவு செய்து பின் நீர்ப் பாய்ச்ச வேண்டும்.

.கால்நடை:

- மாடுகளில் சப்பை நோய் தாக்குதலுக்கான வாய்ப்புகள் உள்ளது.
- இந்நோய் காற்றின் ஈரப்பதம் கூடுதலாக உள்ள பகுதிகளிலுள்ள மாடுகளைப் பெரும்பாலும் பாதிக்கிறது.
- இதுவும் ஓர் மழைக்கால நோயாகும். நல்ல ஆரோக்கியமான திடமான இளம் மாடுகளை 6 மாத வயது முதல் 3 ஆண்டு வயது வரை அதிகம் பாதிக்கிறது.
- நோய்க் கண்ட 48 மணி நேரத்தில் மருத்துவரின் உதவியுடன் உடனடியாக மருத்துவம் செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்திற்கு முன்பே அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி மாடுகளுக்குத் தடுப்பூசி போட வேண்டும்.